இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 26-06-2025

# அடிமைகள் உடம்பில் ரத்தம் எதற்கு?

**“அடிமையின் உடம்பில் ரத்தம் எதற்கு?**

**தினம் அச்சப்பட்ட கோழைக்கு இல்லம் எதற்கு?”** என்று எழுதினார் கவியரசு கண்ணதாசன்.

எடப்பாடி பழனிசாமியே, உங்கள் உடம்பில் ரத்தம் எதற்கு? உங்களுக்கு எல்லாம் கட்சி எதற்கு? அதுவும் அண்ணாவின் பேரால் கட்சி நடத்தி, அண்ணாவுக்கே துரோகம் செய்வது கேவலமில்லையா?

கட்சிப் பெயரில் ‘திராவிடம்’ இருக்கிறது. ‘திராவிடத்தை ஒழிக்க வந்திருக்கிறோம்’ என்று மார்தட்டும் கூட்டத்துக்கு கைதட்ட நான்கு கொத்தடிமைகளை அனுப்புகிறார் பழனிசாமி என்றால் அவர் தனது பெயரை **‘பா.ஜ.க. ஆசாமி’** என்று பெயர் மாற்றிக் கொள்வதுதான் சரியான பொருத்தமாக இருக்கும்.

பா.ஜ.க.வுக்கோ, வகுப்புவாத சக்திகளுக்கோ தமிழ்நாட்டில் இடமில்லை என்பது தமிழ்நாட்டு மக்களின் முடிவான முடிவு. அதனால்தான் தமிழ்நாட்டுக்கு எந்தச் சிறப்புத் திட்டமும் செய்து கொடுப்பது இல்லை. ‘வோட்டுப் போடாதவர்களுக்கு திட்டம் எதற்கு?’ என்று நினைக்கிறது பா.ஜ.க. தலைமை. **‘நன்மை செய்யாதவர்க்கு வாக்கு எதற்கு?’** என்று இருக்கிறது தமிழ்நாடு. இந்த நிலையில் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைப்பது தற்கொலைக்குச் சமம் என்பது மரணப்படுக்கையில் இருப்பவர் கூட மறக்காமல் சொல்வார். ஆனால் அத்தோடு கூட்டணி வைத்துக் கொண்டார் பழனிசாமி. அவருக்கு ஏற்பட்ட நெருக்கடிதான் இதற்குக் காரணம். பழனிசாமியின் உறவினர் வீட்டில் தொடர் ரெய்டு நடத்தி, பல நூறு கோடிக்கு வரிப் போட்டதில் இருந்து தப்பிக்க பா.ஜ.க.வுக்கு அ.தி.மு.க.வைத் தாரை வார்த்தார் பழனிசாமி. இதனை அ.தி.மு.க. தொண்டர்களே முழுமையாக ஏற்கவில்லை. அவர் கூட்டிய மாவட்டச் செயலாளர் கூட்டத்திலும் அந்த அறிவிப்புக்கு கைதட்டல் இல்லை.

‘பா.ஜ.க.வுடன் வெற்றிக் கூட்டணி அமைத்துள்ளோம் என்று சொன்னால் யாருமே கைதட்ட மாட்டேன் என்கிறார்களே’ என்று பழனிசாமி வருந்திய தாகவும் தகவல். இந்த சூழ்நிலையை கசப்பாக உள்ளே போட்டுக் கொண்ட பழனிசாமி, தன்னையும் தனது குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்ள பா.ஜ.க.வுக்கு பாசாங்கு காட்டிக் கொண்டிருக்கிறார். போகட்டும்!

**அதற்காக பேரறிஞர் பெருந்தகை அண்ணாவுக்கு துரோகம் இழைப்பது, மாபெரும் துரோகம் ஆகும்.**

மதுரையில் ஆன்மிகப் போர்வையில் பா.ஜ.க.வின் அரசியல் மாநாடு நடந்துள்ளது. பா.ஜ.க. பேரைச் சொன்னால் யாரும் வரமாட்டார்கள் என்று சொல்லி முருகப்பெருமான் பெயரால் கூட்டத்தைக் கூட்டி, வகுப்புவாத வெறியைத் தூண்டி இருக்கிறது ஒரு கூட்டம். அந்தக் கூட்டத்தில் பழனிசாமியின் அடிமைத்தனமும் பல்லிளிக்கிறது.

ஆர்.பி.உதயகுமார், செல்லூர் ராஜு, கடம்பூர் ராஜு, ராஜேந்திர பாலாஜி ஆகிய கொத்தடிமைகள் முன்னிலையில் அங்கு திரையிடப்பட்ட காட்சியில் ‘அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்’ என்ற சொல்லில் உள்ள ‘அண்ணா’ கொச்சைப்படுத்தப்படுகிறார். ‘திராவிடம்’ என்பதே போலி என்று சொல்லப்படுகிறது. ஆனால் சொரணையே இல்லாமல் இவர்கள் நால்வரும் உட்கார்ந்திருக்கிறார்கள்.

“போலி திராவிடத்தை வேட்டையாடிய சிங்கம்” என்று அந்த மாநாட்டை நடத்திய அமைப்பு தன்னை மார்தட்டிக் கொண்டது. **1967 ஆண்டு முதல் இன்று வரை 58 ஆண்டுகளாக தமிழ்நாட்டை ஆள்வது ‘திராவிடக் கட்சிகளே’ என்பதே அவர்களுக்குத் தெரியவில்லை.**

‘போலித் திராவிடம்’ என்று சொல்லி பெரியாரை, அண்ணாவை, கலைஞரைக் காட்டுகிறார்கள் திரையில். பொதுவாக, தந்தை பெரியாரை அ.தி.மு.க. சொல்லாது. கலைஞர், அவர்களுக்கு எதிரி. ஆனால் அண்ணா என்ன பாவம் செய்தார்? அண்ணாவின் படம் ‘போலித் திராவிடமாக’ அடையாளப்படுத்தப்பட்ட போது அ.தி.மு.க. மாஜிகளுக்கு மனம் வலித்திருக்க வேண்டாமா? இரண்டு இடத்தில் அண்ணாவின் முகத்தைக் காட்டி கொச்சைப் படுத்துகிறார்கள். காணொலிக் காட்சி திரையிடப்பட்ட அந்த இடத்தில் எதிர்க்க முடியாவிட்டாலும், மாநாடு முடிந்த பிறகாவது உடனடியாக எதிர்த்து பேட்டி தந்திருக்கலாமே?

‘சோத்தைத் தின்கிறாயா? எதைத் தின்கிறாய்?’ என்று நாகரிகமாக பேட்டி தரக்கூடிய உதயகுமார் வாயில் என்ன வைத்திருந்தார்? பா.ஜ.க. என்றதும் அண்டா குண்டாவைப் போல அண்ணாவையும் அடமானம் வைத்து விட்டார்கள். ‘திராவிடம்’ என்ற சொல்லையும் பிய்த்தெறிய முடிவெடுத்து விட்டார்கள். **உங்கள் கட்சியின் பெயரில் இருக்கும் அண்ணாவையும், திராவிடத்தையும் நீக்குங்கள். கொடியில் இருக்கும் அண்ணாவின் படத்தை நீக்குங்கள். அதன்பிறகு எந்த ஈனக் காரியத்தையும் செய்யுங்கள்.**

நான்கு பேரும் அமைச்சராக இருந்தவர்கள். ‘கோவில்களில் இருந்து அரசு வெளியேற வேண்டும்’ என்கின்ற தீர்மானம் நிறைவேற்றுவதற்காகத்தான் இந்த மாநாடே நடக்கிறது. இது அ.தி.மு.க. ஏற்றுக் கொண்ட கொள்கையா? **தமிழ்நாட்டில் இருக்கும் கோவில்களைச் சீர்செய்வதற்காக நீதிபதி மகாராஜன் தலைமையில் 1982 ஆம் ஆண்டு ஆணையம் அமைத்தவர் அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.அவர்கள். இது இவர்களுக்குத் தெரியுமா? சொன்னால் புரியுமா?**

மூளை இருக்க வேண்டிய இடத்தில் களை முளைத்துவிட்டதால் எந்தச் சிந்தனையும் இல்லாமல் வெறும் ஜடங்களாகப் போய் உட்கார்ந்து இருக்கிறார்கள். ‘குட்டியை விட்டு ஆழம் பார்த்துக் கொண்டு’ சேலத்தில் உட்கார்ந்து சிரித்துக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

**“சிலர் ஆசைக்கும் தேவைக்கும் வாழ்வுக்கும் வசதிக்கும்**

**ஊரார் கால் பிடிப்பார்**

**அது மானமில்லை. அதில் ஈனமில்லை அவர்**

**எப்போதும் வால் பிடிப்பார்”** என்று எழுதினார் கவிஞர் ஆலங்குடி சோமு.

**வெட்கமில்லையா? மானமில்லையா? ரோஷம் இல்லையா? சூடு இல்லையா? சொரணை இல்லையா?**



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.6.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார்.

உடன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி உள்ளனர்.

# தமிழ்நாட்டில் ‘மா’ விவசாயிகளின் நலனைப் பாதுகாத்திட நிரந்தரத் தீர்வு காணுவீர்!

## பிரதமர் நரேந்திர மோடிக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

*சென்னை, ஜூன் 26-*

***தமிழ்நாட்டில் “மா” விவசாயிகளின் நலனைப் பாதுகாத்திட நிரந்தரத் தீர்வு காணும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கோரி பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.***

***அதன் விவரம் வருமாறு :-***

*தமிழ்நாட்டில் நடப்பாண்டில் “மா” விளைச்சல் அதிகரித்து உள்ளதால், விவசாயிகளின் நலனைக் காத்திட போதிய சந்தைத் தேவையினை ஏற்படுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.*

*அக்கடிதத்தில், தமிழ்நாடு அரசு விவசாயிகளின் நலனுக்காக அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது என்றும், அதற்காக பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது என்பதை குறிப்பிட்டு, தமிழ்நாட்டில் சுமார் 1.46 இலட்சம் எக்டரில் ”மா” சாகுபடி செய்யப்பட்டு அதில் 9.49 இலட்சம் மெட்ரிக் டன் மாம்பழங்கள் உற்பத்தி அடையப்பட்டு பழப் பயிர் சாகுபடியில் தமிழ்நாடு “மா” உற்பத்தியில் பெரும்பங்கு வகிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த ஆண்டு “மா” மகசூல் அதிகரித்துள்ளதாலும், மாம்பழக்கூழ் தயாரிப்பு நிறுவனங்களின் கொள்முதல் குறைவால், மாம்பழ விலை கிலோவுக்கு ரூ.5க்கும் குறைவாக வீழ்ச்சியடைந்துள்ளது என்றும், இதனால் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்வது அல்லது மரத்திலேயே பழுக்க விட்டுவிடுவதை குறிப்பிட்டுள்ளார்.*

*மேலும், மாம்பழக்கூழ் தயாரிப்பு நிறுவனங்கள் பெரும்பாலும் தனியாரால் நடத்தப்படுவதாலும், தென் மாநிலங்களில் மாம்பழக்கூழ் அதிக அளவில் கிடைப்பதாலும், விவசாயிகள் நியாயமான விலையைப் பெற முடியவில்லை, அதனால் தமிழ்நாட்டிலிருந்து மாம்பழங்களை வழக்கமாக கொள்முதல் செய்யும் கர்நாடகா மற்றும் ஆந்திராவைச் சேர்ந்த வணிகர்களும் மாம்பழங்களை கொள்முதல் செய்வதைத் தவிர்த்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*மாங்கனி விலையில் சந்தை ஏற்ற இறக்கங்கள் இருந்தபோதிலும் “மா” விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இந்த துயரத்தைப் போக்கிட அவர்களுக்கு நியாயமான இழப்பீடு வழங்குவது இத்தருணத்தில் மிகவும் அவசியம் என்பதால், இதில் ஒன்றிய அரசு தலையிட்டு, ஒன்றிய அரசின் சந்தைத் தலையீட்டுத் திட்டத்தில் (MARKET INTERVENTION SCHEME) தற்போது உள்ள மாங்கனி விற்பனை விலைக்கும் சந்தைத் தலையீட்டு விலைக்கும் (MIP) உள்ள வித்தியாசத்தை நேரடியாக விவசாயிகளுக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும், ”மா” விவசாயிகள் குறைந்தபட்சம் சாகுபடி செலவைப் பெறுவதை உறுதி செய்யும் வகையில், நியாயமான விலையில் கொள்முதல் நடவடிக்கைகளைத் தொடங்க மத்திய கொள்முதல் நிறுவனங்களுக்கு அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*இதுமட்டுமின்றி, மாங்கனி வர்த்தகத்தில் ”மா” விவசாயிகள் மற்றும் மாம்பழக்கூழ் தயாரிப்பு நிறுவனங்களுக்கு இடையே நிலவும் அச்சத்தினை போக்கி இருதரப்பினருக்கும் நன்மை கிடைக்கும் வகையில் எடுக்கப்பட வேண்டிய இரண்டு முக்கியமான நடவடிக்கைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.*

*முதலாவதாக, மாம்பழச் சாற்றில் உள்ள பழக் கூழின் உள்ளடக்கம், இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (FSSAI) விதிமுறைகளைப் பின்பற்றாமல், குறைந்தபட்ச அளவு மாம்பழக் கூழ் இருக்க வேண்டும் என்பதை மாம்பழச்சாறு பானங்கள் தயாரிப்பு நிறுவனங்கள் தீர்மானிக்கின்றன. எனவே, பானங்களில் பழக் கூழைக் கலப்பதில் மாம்பழச் சாறு பானங்கள் தயாரிப்பு நிறுவனங்கள் FSSAI தரநிலைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்ய பொருத்தமான வழிமுறைகளை வெளியிடுமாறு இந்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.*

*இரண்டாவதாக, மாம்பழக்கூழுக்கான சரக்கு மற்றும் சேவை வரி 12 சதவீதமாக உள்ளதால் நிறுவனங்கள் அதிக அளவில் மாம்பழக் கூழ் தயாரித்திட ஆர்வமில்லாமல் உள்ளனர். எனவே, மாம்பழக் கூழுக்கான சரக்கு மற்றும் சேவை வரியை 12 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக குறைக்க வேண்டும் என்றும், இது தற்போதைய துயரச் சூழ்நிலையைச் சமாளிக்க ஒரு குறிப்பிடத்தக்க படியாக மட்டுமல்லாமல், நமது விவசாயிகளுக்கு ஆதரவளிப்பதற்கான ஒரு நிரந்தர ஏற்பாடாகவும் இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.*

*தமிழ்நாட்டில் மட்டுமல்ல, மாம்பழம் உற்பத்தி செய்யும் அனைத்து மாநிலங்களிலும் உள்ள விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, மேற்கண்ட பிரச்சினைகளைத் தீர்க்க மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் இதில் தலையிட்டு உரிய அறிவுறுத்தல் வழங்கிடுமாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.*

# அனைத்து பகுதிகளிலும் சீரான குடிநீர் விநியோகம் செய்திட வேண்டும்!

## குடிநீர் விநியோகம் தொடர்பாக அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

*சேலம், ஜூன் 26 -*

*சேலம் மாவட்டத்தில் சீரான குடிநீர் விநியோகம் தொடர்பாக அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி முன்னிலையில் 23.06.2025 அன்று அஸ்தம்பட்டி பொதுப் பணித்துறை ஆய்வு மாளிகையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப்பின், சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:*

*முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதை உறுதி செய்யும் வகையில் தொடர்ந்து கண்காணித்திட அறிவுறுத்தியுள்ளார்கள். அந்தவகையில் சேலம் மாவட்டம் முழுவதும் குடிநீர் தொடர்பான பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து அலுவலர்கள் பணியாற்ற அறிவுறுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப் பட்டு வருகிறது.*

*அந்தவகையில், இன்றைய தினம் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் என அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுவரும் குடிநீரின் அளவு மற்றும் குடிநீரின் தேவைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சேலம் மாவட்டம் முழுவதும் சீரான குடிநீர் விநியோகம் வழங்கிடுவதை அலுவலர்கள் உறுதி செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*குறிப்பாக, கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும், நடைபெற்று வரும் குடிநீர் மேம்பாட்டு பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக, கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் எவ்வித மின்தடையும் இல்லாமல் தொடர்ச்சியாக மின்சா ரம் வழங்கப்படுவதை உறுதி செய்திடவும், குடிநீர் குழாய்களில் உடைப்புகள் ஏற்பட்டால் உடனுக்குடன் சரிசெய்திட வேண்டுமெனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*அதேபோன்று, குடிநீர் குழாய்கள் செல்லும் பகுதிகளில் சாலை அமைக்கும் பணிகள் நடைபெறும் போது பாதுகாப்பாக குடிநீர் குழாய்களுக்கு பழுது ஏற்படாத வகையில் பணிகளை மேற்கொள்ளவும், குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள் ஏதேனும் இருப்பின் அவற்றை போர்க்கால அடிப்படையில் விரைந்து சீரமைத்திடவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.*

*இக்கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி சங்கமித்திரை, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) குருராஜன், மாநகரப் பொறியாளர் செல்வநாயகம், செயற்பொறியாளர்கள் ஆர்.செந்தில்குமார், திருமதி. திலகா, கே.செந்தில்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



கரூரில் கரூர், நாமக்கல் கிழக்கு, மேற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கழக வழக்கறிஞர் அணி சார்பில் 2026 ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்வது குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கழக வழக்கறிஞர் அணி மாநில செயலாளர் என்.ஆர்.இளங்கோ கலந்து கொண்டு தேர்தலில் பணியாற்றுவது குறித்தும், சட்ட நுணுக்கங்களோடு எதிர்கொள்வது குறித்தும் தி.மு.க. வழக்கறிஞர்களுக்கு ஆலோசனை வழங்கி பேசினார். கரூர் மாவட்டச் செயலாளரும், மேற்கு மண்டல தேர்தல் பொறுப்பாளருமான வி.செந்தில் பாலாஜி, நாமக்கல் மாவட்டச் செயலாளர் மூர்த்தி, சட்டத்துறை இணைச் செயலாளர்கள் மணிராஜ், ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கரூர் மேயர் கவிதா கணேசன் ஆகியோர் உள்ளனர். மேற்கு மண்டலம் 2 க்கு உட்பட்ட மூன்று மாவட்டங்களில் இருந்தும் கழக வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.